அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :157/2016

தேதி. : 15/10/2016

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்ட தீர்மானங்கள் ச.ம.க நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 14.10.2016 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை, தி.நகர் தலைமை அலுவலகத்தில் உள்ள பாரதியார் அரங்கத்தில் நடைப்பெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :-

1. உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அவர்கள் பூரண குணமடைந்து விரைவில் இல்லம் திரும்பி, மக்கள் பணிகளை தொடர எல்லாம் வல்ல இறைவனை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி பிரார்த்திக்கின்றது.

2. தொடர்ந்து தமிழக முதல்வர் பற்றியும், அரசின் பணிகளை சரிவர நடத்தவிடாமல் தடுப்பதற்கும் பொது மக்களை குழப்புவதற்கும் தேவையில்லாத வதந்திகளையும் அவதூறுகளையும் பரப்பும் சமூக விரோதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க காவல்துறையை இந்த கூட்டம் வலியுறுத்துகிறது.

3. உச்ச நீதிமன்ற வலியுறுத்தலிற்கு பிறகும் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாது என்று ஒருதலை பட்சமான நிலைப்பாட்டை எடுத்து தமிழக விவசாயிகளை வஞ்சிக்கும் மோடி தலைமையிலான மத்திய அரசை இந்த கூட்டம் ஒரு சுமுகமான நிரந்தரமான தீர்வை விரைவில் காண்பதற்கு வலியுறுத்துகிறது.

4. அண்டை நாடுகளுடன் எல்லை பிரச்சனை, மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பிரச்னை, தீவிரவாத ஊடுருவல் அச்சுறுத்தல் என பல்வேறு பிரச்சனைகளின் பக்கம் மக்களின் கவனத்தை திசை திருப்பி, இறுதியில் டிசம்பர் மாதம் வந்தவுடன் தமிழக அரசியல் கட்சிகள் வற்புறுத்தலின் பேரில் தமிழர்களின் தேய்ந்து போகவிடப்பட்ட அடையாளங்களில் ஒன்றாக ஜல்லிக்கட்டு வீர விளையாட்டு மாறுவதற்கு முன்னர், இப்போதே உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசை இந்த கூட்டம் வலியுறுத்துகிறது.

5. வருகின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் தமிழக முதல்வர் அவர்களின் கரத்தை வலுப்படுத்த, "உள்ளாட்சியில் நல்லாட்சி" என்ற முழக்கத்தோடு மாநிலம் முழுவதும் சமத்துவ மக்கள் கட்சி தேர்தல் பணியாற்றி வெற்றிபெற பாடுபட வேண்டுமென இந்த கூட்டம் முடிவு செய்கிறது.

6. தஞ்சாவூர், அரவக்குறிச்சி சட்டமன்ற தேர்தலிலும் திருப்பரங்குன்றம் சட்டமன்ற இடைத்தேர்தலிலும் அ.இ.அ.தி.மு.க கூட்டணியின் வெற்றிக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி முழு ஒத்துழைப்பு நல்கி பெருவாரியான வாக்குகள் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்